கோடி நிதி ஒதுக்கப்பட்டும் இன்னும் பணி துவங்கப்படவில்லை. இந்த ஆண்டு அந்தப் பணியை முடித்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருமாறு அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(அஈ) கிருஷ்ணகிரி–பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலை, அகற்றப்பட்ட அம்பேத்கர் சிலையை சொந்த இடத்தில் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டு காலமாக கிருஷ்ணகிரி–பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலை இருந்தது. அது 16–9–2016 அன்று அரசின் மூலமாக அகற்றப்பட்டது. அகற்றப்பட்ட சிலை பேரூராட்சியில் இருக்கிறது. நாங்கள் சொந்த இடம் வாங்கி விட்டோம். சொந்த இடத்திலே அந்தச் சிலையை அமைப்பதற்கு அரசு அனுமதிக்குமா என்பதைக் கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அஉ) துறைமுகம் தொகுதி, தங்கசாலை தெருவிலுள்ள முருகன் கோயிலைப் புனரமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கசாலை தெருவில் முருகன் திருக்கோயில் அமைந்திருக்கின்றது. ‘வேல் உண்டு வினை இல்லை, மயில் உண்டு குறையில்லை, கோல் உண்டு குறைவில்லை’ என்று சொல்வார்கள். இந்த வார்த்தைகளுக்குச் சொந்தமான அந்தக் கோயிலில் மலைபோல அமைந்திருக்கின்ற கோபுரம் இருக்கும். படிகலிங்கம் அந்தக் கோயிலில் மட்டும்தான் இருக்கின்றது. பின்னால் ஆரத்தி காட்டினால் முன்னால் ஜொலிக்கும். அந்தக் கோயில் இன்றைக்கு முழுவதுமாக பக்தர்களுக்குப் பயன்பாடு இல்லாமல் இருக்கிறது. ‘வறண்டுபோன நிலங்கள் எல்லாம் வற்றாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும்; அந்த நதியே காய்ந்துபோனால் துன்பப்படுவோர் தெய்வத்திடம் முறையிடுவார்கள்; அந்தத் தெய்வமே கலங்கி நின்றால், அந்தத் தெய்வத்துக்கு யாரால் ஆறுதல்*